# 2012 ஆம் ஆண்டுக்கான
# செயல்நிறைவேற்று அறிக்கையும்
# வருடாந்த கணக்குகளும்.

# வர்த்தக திணைக்களம்

# தலைப்பு 295

*4ஆவது மாடி, ரக்ஷண மந்திரய,*
*இல. 21, வொக்ஸோல் வீதி*
*கொழும்பு 02.*
*தொலைபேசி: 011 – 232 9733 / 242 6114*
*தொலைநகல்: 011 – 243 0233*
*மின்னஞ்சல்:fortrade@doc.gov.lk*
*இணையதளம் : :www.doc.gov.lk*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ***1.*** | *அறிமுகம்* | **3** |
| ***2.*** | *இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு **2012*** | ***4*** |
| ***3.*** | *இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு* | ***5*** |
| ***4.*** | *வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு* | ***10*** |
| ***5.*** | *பல்தரப்பு வர்த்தக உறவுகள்* | ***11*** |
| ***6.*** | *பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு* | ***13*** |
| ***7.*** | *வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு* | ***16*** |
| ***8.*** | *உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் வழங்குகை* | ***22*** |
| ***9.*** | *பதவியினர் இடநகர்வுகள்* | ***26*** |
| ***10.*** | *நிதிக் கூற்று* | ***27*** |

## 1.0 அறிமுகம்

### *திணைக்களத்தின் செயற்பணி*

***“இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்.”***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வர்த்தக ரீதியிலான கொள்கை விடயங்களில் மதியுரை வழங்கும் முகமையகமாகவும் இருதரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தக மட்டங்களில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது. திணைக்களத்தினால் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலான தொழிற்பாடுகளும் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகளும் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.
- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.
- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. எனவே, 2012 ஆம் ஆண்டுக்கான வேலை நிகழ்ச்சித்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. திணைக்களம், அதன் வெளிநாட்டு

வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறை ஆகியவற்றினை ஊக்குவிப்பது நோக்கில் தேவையான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்கியுள்ளது.

**2.0 2012 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு**

**2.1 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்நிறைவேற்றம்**

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 9,774 மில்லியன் அ.டொலருக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இது 2011 இல் 10,559 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 7.4% வீழ்ச்சியினைப் பதிவு செயதுள்ளது. விவசாய உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி சம்பாத்தியமானது, 7.8% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளன. தேயிலை உள்ளடங்கலான விவசாய உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதியானது 1,412 மில்லியன் அ.டொலரினைப் பதிவு செய்துள்ளதுடன் இது 5.3% வீழ்ச்சியினைக் குறிக்கின்ற அதேவேளையில் இறப்பர் ஏற்றுமதியானது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39.4% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

2012 இல் 7,371 மில்லியன் அ.டொலராக இருந்துள்ள கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 2011 இல் காணப்பட்டதிலும் பார்க்க 7.8% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. 41% இற்கும் அதிகமான பங்களிப்பினை வழங்கிய புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளுக்கான ஏற்றுமதிகள் கைத்தொழில் ஏற்றுமதிகளில் மிப்பெரிய பங்களிப்பினை வழங்கியுள்ளன. 2011 இல் 4,191 மில்லியன் அ.டொலிரிலிருந்த தைத்த ஆடைகள் 2012 இல் 3.991 மில்லியன் அ.டொலருக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இது 5% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. இறப்பரினாலான உற்பத்திப்பொருட்கள் மற்றும் மாணிக்க கற்கள், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பன கைத்தொழில் ஏற்றுமதியில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

**அட்டவணை 1**

**மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2008-2012**

**(மில்.அ.டொலர் பெறுமதியில்)**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி % | இறக்குமதிகள் | வளர்ச்சி % | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| 2008 | 8,179 | 6.3 | 14,191 | 24.5 | 22,145 | -5,871 |
| 2009 | 7,085 | -13.0 | 10,206 | -28.0 | 17,291 | -3,121 |
| 2010 | 8,626 | 21.7 | 13,451 | 31.8 | 22,076 | -4,826 |
| 2011 | 10,559 | 22.4 | 20,269 | 50.9 | 29,721 | -9,685 |
| 2012 | 9,774 | -7.4 | 19,183 | -5.4 | 28,957 | -9,409 |

***மூலம்: இலங்கைச் சுங்கம்***

## 3.0 இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்

இலங்கையானது அதன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (சுவஉ) பங்காளி நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் விசேட கவனத்துடன் ஐக்கிய மெரிக்கா, ஐ.ஒ, ரஷியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற அதன் பாரிய வர்த்தக பங்காளி நாடுகளுடன் இருதரப்பு வர்த்தகம் மற்றும்பொருளாதார ஒத்தழைப்பு தொடர்பில் கூடிய அக்கறையினை தொடர்ந்தும் செலுத்தி வந்துள்ளது. இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் அதன் வர்த்தக நலன்களில் சமவளவிலான முக்கியத்துவத்தினைக கொடுத்துள்ளது.

## 3.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (இஸ்ப்ரா)

1998, டிசம்பர் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000, மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தில் பரந்தளவிலான பொருட்களுக்கு தீர்வை விலக்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது 2008 நவம்பரிலிருந்து முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சுங்கத் தீர்வையின்றி இந்திய சந்தைக்கு 4000 இற்கும் அதிகமான உற்பத்தி வரிசைகளை ஏற்றுமதி செய்ய முடிந்துள்ளது.

2012 இல் இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 566 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் இது 2011 இல் 522 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 8.6% வளர்ச்சிப் போக்கினைப் பதிவு செய்துள்ளது. இந்த அதிகரிப்பானது உண்மையில் கொண்டு செல்லலுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கொள்கலன்கள், விலங்குணவு, இயற்கை இறப்பர், பரிமாற்றக்கூடிய இயந்திர உபகரணங்கள், புதிய காற்றடிக்கப்பட்ட இறப்பர். ரயர்கள், ஆடை துணைப் பொருட்கள், கறுவா, வெதுவெதுப்பான காகிதங்கள், காபன் ஒக்சைட், பண்டிகை கால பொருட்கள் போன்றஏற்றுமதிகளில் எற்பட்ட அதிகரிப்பின் காரணமாகவே ஏற்பட்டதாகும். மேற்படி உற்பத்திப் பொருட்கள் உள்ளடங்கலான அநேகமான பொருட்கள் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வர்த்தக திணைக்களமானது, 2012 இல் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் மொத்தமாக 9,742 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்கியுள்ளது. இது 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 10,277 உடன் ஒப்பிடுகையில் 5% வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. மறுபுறத்தில், 2012 இல் இந்தியாவிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் 3,517 மில்லியன் அ.டொலரினை குறிப்பிடுவதுடன் இது 2011 இல் காணப்பட்ட 4,350 மில்லியன் அ.டொலருடன் ஒப்பிடுகையில் 19% வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது.

### 3.2 இந்தியவுடனான தாராள பொருளாதார பங்குடமை உடன்படிக்கை (சீபா)

இலங்கையானது தற்போதைய இருதரப்பு பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் தாராள பொருளாதார வர்த்தக உடன்படிக்கை(சீபா) தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றது. 2008 ஜீலையில் நடாத்தப்பட்ட வர்த்தக பேச்சுவார்த்தை குழுவின் மூன்றாவது சுற்றுக் கூட்டம் முடிவடைந்தமையின் காரணமாக உத்தேச ஏற்பாடுகள் தொடர்பான முறையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. இரண்டு அரசாங்கங்களும் 13 சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் பின்னர் உத்தேச சீபாவுக்கான வரைபின் பெரும்பாலான பகுதிகளை நிறைவு செய்துள்ளன. எவ்வாறாயினும், சீபா பேச்சுவார்த்தைகள் சேவைகளின் விடுவிப்பு தொடர்பில் சில இலங்கையின் தனியார் துறையினைச் சேர்ந்த சில அக்கறைதாரர்களினால் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களின் காரணமாக 2008 இல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

2011 பெப்ரவரியின் பின்னர், இந்தியாவுடனான உத்தேச உடன்படிக்கையில் உள்ளடங்குகின்ற விடயங்கள் மற்றும் நகல் வரைபினை தயாரிக்கும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முகவராண்மைகளுக்கிடையிலான குழுவொன்று (IAC) தாபிக்கப்பட்டது. முகவராண்மைகளுக்கிடையிலான குழுவுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் பின்னர்முதலீடு தொடர்பான அத்தியாயம் நீங்கலாக சீபா உடன்படிக்கையின் அனைத்து அத்தியாயங்களின் மீளாய்வும் பூர்த்தி செய்யப்பட்டது.

இலங்கை முதலீட்டு சபையின் உரிய அதிகாரிகள் மற்றும் அதன் இந்திய ஒப்பந்த தரப்பினரான கைத்தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு திணைக்களத்தின் அதிகாரிகளும் 2012 ஜீலை 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் கொழும்பில் சந்தித்து இந்தியாவினால் உற்பத்தி செய்யப்பட்ட முதலீட்டு அத்தியாயத்தின் புதிய வரைபு தொடர்பில் சில பூர்வாங்க கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர். இலங்கை முதலீட்டு சபையானது அதன் நோக்கினை வர்த்தக திணைக்களத்திற்கு சமர்ப்பித்துள்ளபோதிலும் சீபா பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு அப்போது அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் சீபா பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதற்கு மேலாக சீபா பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படாமையால் கூட்டு ஆணைக்குழுவினாடாக இலங்கையும் இந்தியாவும் வர்த்தக செயலாளர் மட்டத்திலான கூட்டத்தினை அண்மையில் நிறைவு செய்துள்ளதுடன் வர்த்தக, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலா, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் முதலீடு ஆகிய விடயங்களில் புதிய முன்னேற்றங்களை காணும் பொருட்டு பின்வரும் ஆரம்பிக்குகைகளினை மேற்கொள்வதற்கு உடன்பட்டுள்ளது.

1. மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு 10 பில்லியன் அ.டொலருக்கு இரு தரப்பு வர்த்தகத்தினை விரிவாக்கும் அதேவேளையில் வர்த்தக பற்றாக்குறையினை குறைப்பதில் கவனம் செலுத்துதல்.
2. நடைமுறை நிலை மற்றும் எதிர்கால நலன்களைப் பிரதிபலிக்கும் வகையில் சுற்றுலாத் துறையிலுள்ள ஒத்துழைப்பு மீதான நடைமுறை புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீளாய்வு செய்தல்.
3. சுங்க ஒத்துழைப்பு மீதான இருதரப்பு உடன்படிக்கை

4. இருவழி முதலீடுகளை அதிகரிக்கும் பொருட்டு இரட்டை வரி விதிப்பினை தவிர்ப்பது தொடர்பான உடன்படிக்கை
5. புடவை, கைத்தறி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை.
6. என்ரிபிகள் மற்றும் வர்த்தக விரிவாக்கம் ஆகியவற்றினை நீக்கும் பொருட்டு நியமங்கள் மீதான பரஸ்பர அங்கீகார உடன்படிக்கை

### 3.3 பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 ஜீன் 12 ஆம் திகதியன்று செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதியானது கணிசமானளவு மேம்பாட்டினை அடைந்துள்ளது. 2004 இல் 147மில்லியன் அ.டொலராக இருந்த இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதியானது 2011 இல் 410.5 மில்.அ.டொலருக்கு அதிகரித்துள்ளது. 2004 இல் 39 மில்லியன் அ.டொலரில் பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கையின் ஏற்றுமதிகள் 2008 இல் 71 மில்.அ.டொலருக்கு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், பாகிஸ்தானுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2009 இல் 55 மில்லியன் அ.டொலருக்கு 23% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக உலர்த்திய தேங்காய் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் உலக பொருளாதார வீழ்ச்சி என்பனவற்றினைக் குறிப்பிடலாம். பாகிஸ்தானுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் மீளவும் அதன் உயர்வினைப் பெற்றுள்ளதுடன் 2012 இல் 82.75 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 10% வளர்ச்சியினைக் காட்டுகின்றது. இந்தியவுக்கு அடுத்தபடியாக சார்க் பிராந்தியத்தில் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளி பாகிஸ்தானாகும்.

பாகிஸ்தானுக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிகள் இயற்கை இறப்பர், கொப்பறா, தேயிலை, தெங்கு, வாசனைத்திரவியங்கள், வெற்றிலை ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. PSFTA இன் அமுலாக்கலின் பின்னர் பாகிஸ்தானிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருட் தொகுதியொன்று ஊடுருவியுள்ளதுடன் அவை புதிய அன்னாசி, விளையாட்டு பொருட்கள், புளி, உண்ணக்கூடிய எண்ணெய், பீங்கான் மேசைப் பொருட்களும் சமயலறைப் பொருட்களும், பீங்கான் தரை ஓடுகள், தளபாடம், மின்சார ஆளிகளும் சொக்கற்றுக்களும், மூலிகை அழகு சாதன பொருட்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள், வர்ணங்கள், கண்ணாடி சித்திரங்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், குளிரூட்டப்பட்ட மீன், இறால் வகை, கணவாய், நண்டு, வெட்டுப் பூக்கள் மற்றும் இலைத் தொகுதி, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் மற்றும் அலங்கார மீன் போன்றவற்றினை உள்ளடக்குகின்றன.

## 3.3 ஐக்கிய அமெரிக்க – இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை.

2002 இல் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டு சட்ட ரீதியான உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான பரந்தளவிலான நிறுவனசார் ஏற்பாட்டினை வழங்குகின்றது. இது உயர் மட்டத்தினாலான வர்த்தக உத்தியோகத்தர்களுக்கிடையில் முறையான தொடர்புகளைப் பேணுவதற்கு வசதியளிக்கின்றது. இரண்டு நாடுகளுக்குமிடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு பாய்ச்சல்களில் தடைகளை ஏற்படுத்துகின்றவற்றினை உரிய அதிகாரிகள் இனங்காண்பதற்கும் வசதியளிக்கின்றது.

TIFA இன் உள்ளடக்கத்தில், இலங்கையின் பிரதான நோக்கங்களில் (அ) அதன் ஏற்றுமதிகளுக்கான விரிவாக்கப்பட்ட சந்தை அணுகுமுறையினை பாதுகாத்தல். குறிப்பாக தைத்த ஆடைகளினூடாக ஏதேனும் விசேட வர்த்தக முன்னுரிமைகள் அல்லது உற்பத்தி உள்ளடக்கம் மற்றும் மூல விதி போன்றவை தொடர்பில் மேலதிக நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய ஐ.அ. ஜிஎஸ்பி மற்றும் (ஆ) புலமைச் சொத்து உரிமைகள், வர்த்தக வசதிப்படுத்தல்கள், வர்த்தக ஆற்றல்களைக் கட்டியெழுப்புதலும் இலங்கை கறுவாவுக்கான பண்டக்குறியிடலும், தெங்கு உற்பத்தி நோக்கிலான ஏற்றுமதிக்கான வலு முகாமைத்துவம், ஐக்கிய அமெரிக்க உணவுகளின் மீது விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும் ஔடத முகாமைத்துவ லேபலிடல் தேவைப்பாடுகள், சட்டத்தரணிகளின் திறன்களைக் கட்டியெழுப்புதல், வர்த்தக நடுவத் தீர்ப்பு விடயங்களின் நிருவகிப்பாளர்கள் போன்ற விடயங்களில் ஐக்கிய அமெரிக்காவின் ஒத்துழைப்பினைப் பெறுதல்.

இணைந்த TIFA இன் கீழான கூட்டுப் பேரவையின் 10 வது கூட்டமானது எக்ஸ்போ சிறிலங்கா 2012 இனை முன்னிட்டு 2012 பெரப்ரவரி 27 ஆம் திகதி இலங்கையில் நடாத்தப்பட்டது. இலங்கையின் தூதுக்குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரினால் தலைமை தாங்கப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக் தூதுக்குழுவிற்கு மத்திய மற்றும் தென்னாசியாவுக்கான உதவி ஐக்கிய அமெரிக்க வர்த்தக பிரதிநிதியினால் தலைமை வகிக்கப்பட்டது.

உத்தியோகபூர்வ தூத்துக்குழுவிற்கு மேலதிகமாக, வொஸிங்டனிலுள்ள இலங்கை தூதரகமானது எக்ஸ்போ சிறிலங்கா 2012 இல் பங்குபற்றுவதற்கு, அமெரிக்காவிலிருந்தான முன்னணி வர்த்தகர்களைக் கொண்ட தனியார் துறையினைச் சேர்ந்த தூதுக்குழுவொன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக அமெரிக்க தரப்பில் பெண்கள் வலுவூட்டல் தொடர்பிலும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெண்களின் பங்களிப்பு குறித்தும் இலங்கை அரசாங்கத்திற்கு தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளது.தெற்கு மற்றும் தென்னாசிய

விவகாரங்களுக்கான ஐக்கிய அமெரிக்க வர்த்தக உறவுகள் பிரதி உதவியாளர் பெண்கள் வர்த்தக மன்றத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இலங்கைப் பெண்களின் தொழில் முயற்சிகளுக்கு எந்தவகையில் அமெரிக்க தரப்பினால் உதவியளிக்க முடியும் என்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இலங்கைப் பெண்களின் தொழில் முயற்சிகளுக்கான வர்த்தக மன்றத்தினை மேற்கொள்ளப்படும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் அதேவேளையில் அமெரிக்க தரப்பானது தமது ஒத்துழைப்பினை வழங்கும் பொருட்டு அமெரிக்க தரப்புடன் தொடர்ந்தும் தொடர்பினைப் பேணுமாறு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய அமரிக்க தூதுக்குழுவானது இலங்கையின் தொழில்முயற்சியாளர்களுக்கு நன்மையளிக்கும் நிகழ்ச்சித்திட்டமான US – GSP தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் விசேடமாக அமெரிக்க சந்தைக்கான ஏற்றுமதிகளை மேற்கொள்வோருக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடாத்தியுள்ளது. தற்போது, GSP நன்மைகளின் கீழ் அமெரிக்காவுக்கு 150 மில்லியன் அ.டொலர் பெறுமதியுடைய இலங்கையின் ஏற்றுமதிகள் பூச்சிய தீர்வையில் அமெரிக்க சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

### 3.4.1 இலங்கையின் வேலையாளர் உரிமைகளை தொடர்பான US – GSP நாட்டு நடைமுறை முறைப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல்

அமெரிக்க தொழில் சம்மேளனமும் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தொழில் சங்கங்களின் மிகப் பெரிய சம்மேளனமான கைத்தொழில் நிறுவனங்களின் காங்கிரஸும் (AFL CIO), இலங்கையில் பாரியளவில் தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்டு வருவது தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான GSP நன்மைகளை நிறுத்தி வைக்குமாறு 2000 ஆம் ஆண்டு டிசம்பரில் ஐக்கிய நாடுகள் வர்த்தக பிரதிநிதிகளின் அலுவலகத்தில்(USTR) நாட்டு நடைமுறை முறைப்பாடொன்றினை மேற்கொண்டுள்ளன. USTR அலுவலகத்தில் US – GSP நிகழச்சித்திட்ட பொறுப்பாளரினால் தலைமை வகிக்கப்படும் US – GSP உப குழுவானது, தொழில், வர்த்தகம், அரசாங்க மற்றும் விவசாயம், அமெரிக்க திறைசேரி, அமெரிக்க உதவி போன்ற ஐக்கிய அமெரிக்க திணைக்களங்களிலிருந்தான சிரேஸ்ட அதிகாரிகளைக் கொண்டுள்ளதுடன் AFL CIO இனால் மேற்கொள்ளப்படும் குற்றச்சாட்டுக்களை தொடர்பில் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னதாக மேற்படி முறைப்பாட்டினை மீளாய்வு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

மீளாய்வு நடைமுறையானது அமெரிக்க உப குழுவின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் பொதுமக்களின் குறை கேட்டல்கள், ஆர்வமுடைய தரப்புக்களினால் குறை கேட்டலின் பின்னர் முன்வைக்கப்படும் கருத்துரைகள், உறுதிப்படுத்தல் விஜயங்கள் போன்றவற்றினை உள்ளடக்கும்.

மீளாய்வு நடைமுறையின் பொது, 2012 ஜனவரி 24 ஆம் திகதியன்று வொஸிங்டன் வர்த்தக திணைக்களத்தில் நடாத்தப்பட்ட AFL CIO முறைப்பாட்டு மீளாய்வு தொடர்பான இரண்டாவது பொதுமக்கள் குறைகேட்டலின் முன்னர் நடாத்தப்பட்டு 2012 ஜனவரி 10 ஆம் திகதியன்று முன்னதாக குறை கேட்டலானது தாராளமாக நடாத்தப்பட்டது. அது தொடர்பில் குறை கேட்டலின் பின்னரான கருத்துரைகள் 2013 பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் USTR அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாகவும் US – GSP நன்மைகளைத் தொடர்ந்தும் இலங்கை உரித்தளிக்கின்ற இலங்கையின் US – GSP தொழிலாளர் உரிமைகளின் மீளாய்வினை நிறைவு செய்வதனை உத்தியோகபூர்வமாக அறிவித்து USTR அலுவலகத்தில் 2012 ஜின் 29 ஆம் திகதியன்று US – GSP முறைப்பாட்டில் தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு கடந்த சில ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.0 வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழு

உறுதிப்படுத்தல் விஜயங்கள் வர்த்தக திணைக்களமானது, அமைச்சர்கள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் இருதரப்பு கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கீழான வர்த்தகத்துடன் தொடர்புடைய வியடங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

- இலங்கை – பங்களாதேஸ்
- இலங்கை – எகிப்து
- இலங்கை – ஈரான்
- இலங்கை – மாலைதீவு
- இலங்கை - ஈராக்
- இலங்கை – சீனா
- இலங்கை – இந்தியா
- இலங்கை – குவைற்
- இலங்கை – பாகிஸ்தான்
- இலங்கை – தாய்லாந்து

## 4.1 பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இலங்கை – பங்களாதேஸ் கூட்டு ஆணைக்குழுவின் 4ஆவது அமர்வு

இலங்கைக்கும் பங்களாதேஸுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 4 ஆவது அமர்வு 1993 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட 3 ஆவது அமர்வின் பின்னர் கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலத்தின் பின்னர் பங்களாதேஸ் டாக்காவில் 2012, மார்ச் 7 – 8 வரையில் நடாத்தப்பட்டது.

பங்களாதேஸ் தூதுக்குழுவிற்கு பங்களாதேஸ் நிதி அமைச்சர் கௌரவ.அப்துல் மால் அப்துல் முஹித் தலைமை தாங்கிய அதேவேளையில் இலங்கையின் தூதுக்குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் தொடர்பிலான வாய்ப்புக்கள் அவ்வாறே அது தொடர்பான தடைகள் குறித்தும் ஆராய்ப்பட்டதுடன் ஒவ்வொரு நாடும் மற்றைய நாட்டுடனான இருதரப்பு வர்த்தகத்தின் அளவு மற்றும் முதலீட்டினை விரிவாக்குவதற்காக இத்தகைய விடயங்களில் மேலும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கும் உடன்பட்டுக் கொண்டன. இரு தரப்பும் இரண்டு நாடுகளினதும் உள்ளடக்கங்களை வெளிக் கொணருவதற்கான  சார்க் வர்த்தகத்தினை விரைவாக்குவதற்கான தமது இணக்கப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன.

### 4.2 இலங்கை மற்றும் உக்கிரேயினுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்காக அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டு ஆணைக்குழுவொன்றினை தாபித்தல்.

இலங்கை மற்றும் உக்கிரெயின் நாடுகளுக்கிடையிலான தூதுக்குழுக்கள் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டு ஆணைக்குழுவொன்றினை தாபிப்பது தொடர்பில் இலங்கை மற்றும் உக்கிரெயின் ஆகிய நாடுகளுக்கிடையிலான வரைபு உடன்படிக்கை தொடர்பான விரிவான கலந்துரையாடல்களை 2012 மே 22 ஆம்திகதி கொழும்பில் நடாத்தியுள்ளன. இலங்கை தூதுக்குழுவிற்கு வர்த்தக பணிப்பாளர் நாயகம் தலைமை வகித்த அதேவேளையில், உக்கிரெயின் தூதுக்குழுவிற்கு உக்கிரெயின் நாட்டு பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சின் வெளிநாட்டு பொருளாதார கொள்கைகளுக்கான சட்ட உதவுகை பிரிவின் தலைவரும் தலைமை வகித்தனர்.

பேச்சுவார்த்தைகள் திறந்த மனதுடனும் சினேகபூர்வமாகவும் திரட்டு உடன்படிக்கையின் வரைபின் அடிப்படையிலும் நடாத்தப்பட்டதுடன் பேச்சுவார்த்தைகள் திருப்திகரமான நிலையில் நிறைவு செய்யப்பட்டன.

## 5.0 பலதரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் முதன்மையா கஉலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளது. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

### 5.1 உலக வர்த்தக நிறுவனம் (உவநி)

உலக வர்த்தக நிறுவனத்தின் கீழான வர்த்தக பேச்சுவார்த்தைகளின் டோஹா அபிவிருத்தி சுற்றின் கீழான பேச்சுவார்த்தைகள், எவ்வித உண்மையான முன்னேற்றமுமின்றி 2012 இல்

மிகவும் மந்த நிலையிலிருந்தது. எவ்வாறாயினும்,பேச்சுவார்தையின் இந்த சுற்றினை நிறைவு செய்வதற்குத் தேவையானவற்றினை மேற்கொண்டுள்ளதுடன் 2013 டிசம்பரில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உவநி இன் 9 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டின் மிக முக்கியமான சில பகுதிகளின் வரையறைகளை நிறைவு செய்யும் பொருட்டு 2013 இல் மீளவும் ஒருங்கிணைவதற்கும் உடன்பட்டுக் கொண்டனர்.

இதன் விளைவாக, பல்வேறு பேச்சுவார்த்தை குழுக்கள் விவசாயம், NAMA,TRIPS,சேவைகள் மற்றும் சட்டவிதிகள் போன்றவற்றிலுள்ள தீர்வு காணப்படாத விடயங்களுக்கான தீர்வினைக் காண்பதற்கான முயற்சிகளை பல்வேறுபேச்சுவார்த்தைக் குழுக்கள் ஈடுபட்டுள்ள அதேவேளையில் வர்த்தக வசதிப்படுத்தல் மீதான வரைபு உடன்படிக்கை மீதான வேலைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2012 ஆகஸ்டில் உவநி இல் ரஷிய சம்மேளனமானது முறையாக இணைந்துள்ளதுடன் சமோவா, மொன்ரெனோக்றா மற்றும் வனுவது, லாவோஸ் மற்றும் தஜிகிஸ்தான போன்ற ஏனைய சில புதிய அங்கத்துவ நாடுகள் 2013 இல் இறுதி வடிவத்தினைப் பெறும் நோக்குடன் தமது பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இலங்கையானது உவநி இல் டோஹா அபிவிருத்தி சுற்று குறித்த பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. சிறிய நலிவடைந்த பொருளாதாரமென்ற வகையில், விவசாயம், விவசாயமல்லா சந்தை அணுகுமுறை (NAMA) புலமைச் சொத்துக்கள் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல்கள் ஆகியன உள்ளடங்கலான முன்னுரிமை வாய்ந்த விடயங்களில் கூடிய கவனம்செலுத்துகின்றது.

விவசாயத்தில், இலங்கையின் கவனமானது சிறிய நலிவடைந்த பொருளாதாரங்கள் மற்றும் தேறிய உணவு இறக்குமதி செய்யும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான (NFIDC) நெகிழ்வுத் தன்மைகள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது. இத்தகைய நெகிழ்வுத் தன்மைகள் சந்தை அணுகுமுறை, இறக்குமதி குவிப்புக்கதிராக உள்நாட்டு விவசாயத்தினைப் பாதுகாக்கும் பொறிமுறை மற்றும் உள்நாட்டு ஆதரவுடன் இணக்கப்பாடுகளின் குறைப்புக்களிலிருந்தான விதிவிலக்கு என்பனைவற்றில் குறைந்த இணக்கப்பாட்டினை பொறுப்பேற்பதனை உள்ளடக்குகின்றது.

NAMA இல், இலங்கையின் கவனமானது அதன் பிரதான ஏற்றுமதிகளுக்கான விசேடமாக ஆடைகள் மற்றும் மீன்பிடி போன்ற முக்கிய சந்தைகளிலுள்ள உயர் தரிவுகளைக் குறைப்பதனூடாக மேம்படுத்தப்பட்ட சந்தை அணுகுமுறையினை அடைவதில் உள்ளது. அத்துடன் இலங்கையானது தொடர்ந்தும் தரிவு குறைப்பு இணைக்கப்பாடுகளிலிருந்து தொடர்ந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

IPR இன் முக்கிய பகுதிகளில், இலங்கையானது புவியியல் குறிகாட்டிகள் மற்றும் மரபு ரீதியான அறிவு என்பற்றிற்கான அதிகரித்த பாதுகாப்பினை வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கையானது, வர்த்தக வசதிப்படுத்தல்களை மற்றும் ஒழுங்குவிதிகளை பாதுகாக்கும் நோக்குடன் வர்த்தக வசதிப்படுத்தல் மீதான புதியதொரு உடன்படிக்கை மீது தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கையானது சிறிய நவிவடைந்த பொருளாதாரம் என்ற வகையில் பேச்சுவார்த்தைகளின் ஏனைய பகுதிகளில், அதன் நலன்கள் பாதுகாக்கப்பட்டதனை உறுதி செய்வதற்கும் அனைத்து வரையறைகளையும் கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது.

## 5.2 வர்த்தக முன்னுரிமைகள் மீதான பூகோள முறைமை (GSTP)

அபிவிருத்திடைந்து வரும் நாடுகளுக்கடையிலான GSTP மீதான உடன்படிக்கையானது 1989 இல் தாபிக்கப்பட்டது. வர்த்தக முன்னுரிமைகள் மீதான பூகோள முறைமையானது தென்னாசிய வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான மாநாட்டின் தொனிப்பொருளின் கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட ஓர் தரிவு முன்னுரிமை செயல்திட்டமாகும்.
இலங்கையானது GSTP இன் மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியது. குறிப்பாக, இலங்கையானது மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் மூல விதிகளிலுள்ள இலங்கையின் நலன்களை முன்னேற்றுவது தொடர்பில் ஈடுபட்டது. உள்நாட்டு பெறுமதி சேர்ப்பில் இருந்த இலங்கையின் நிலைப்பாடானது GSTP ஏற்பாட்டிற்காக போதுமான மூல வளங்களைக் கொண்டிராத அல்லது 50% உள்நாட்டு பெறுமதி சேர்ப்பினை முழுமையாக அடைவதற்கு கைத்தொழிலினை அடிப்படையாகக் கொண்ட அத்தகைய நாடுகளினால் பயன்படுத்தப்படுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டியவை குறைக்கப்படுதல் வேண்டும். இறுதி வரையறைகள் இலங்கையின் அக்கறையினை முழுமையாக திருப்பதிப்படுத்துவதாக இருக்கவில்லை.

## 6.0 பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது APTA,SAPTA,BIMSTEC மற்றும் IOR-ARC ஆகிய அதன் பிராந்திய வர்த்தக மற்றும் பொருளாதார ஏற்பாடுகளில் பிரதான பங்கினை தொடர்ந்தும் வகித்து வருகின்றது.

## 6.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

இலங்கையானது APTA இன் கீழான அதன் ஏற்றுமதிகளை குறிப்பாக சினா மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்கு தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. 2012 இல் APTA இன் கீழான சீனாவுக்கான ஏற்றுமதிகள் 37 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் பெரும்பாலானவை தும்பு மற்றும் தேயிலை, மீன் மற்றும் தைத்த ஆடைகளின் மூலமாகவே கிடைக்கப் பெற்றன.

அத்துடன் APTA இன் கீழான கொரியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 20 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளதுடன், இது 2011 இல் 17 மில்லியன் அ.டொலராக இருந்தது. கொரியாவுக்கான ஏற்றுமதிகள் சீனாவுக்கான எற்றுமதிகளிலும் பார்க்க தைத்த ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பீங்கான் பொருட்கள் அவ்வாறே தேயிலை போன்ற பல்வேறு வகைப்படுத்தப்பட்ட பொருட்களை உள்ளடக்குகின்றது.

உறுப்பினர்கள் சுற்றுக்கான மூல வரையறைகளைக் கொண்டிருக்கவில்லையென இந்தியா அறிவித்த அதாவது தரிவு வரிசைகளின் 40% மீதான இலாப எல்லையின் 40% சராசரியினை வழங்குகின்ற 4 ஆவது சுற்று பேச்சுவார்த்தையின் அமுலாக்கல் தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். APTA இன் நிலையியல் குழுவின் 39 ஆவது அமர்வில், உறுப்பினர்கள் இந்தியாவின் இறுதி கோரிக்கையான ஆகக்குறைந்த தரிவுப்பட்டியலினை நிறைவேற்றுவதற்கு அவர்கள் வழங்கிய சலுகைப் பட்டியல்களை மீளாய்வு செய்வதற்கு சீனா மற்றும் கொரியாவினை அநுமதிப்பதற்கு முழுமையான பங்குபற்றுதலுடன் 4 அவது சுற்றினை நிறைவு செய்யும் பொருட்டு உடன்பட்டுக் கொண்டனர்.

அத்துடன், உறுப்பினர்கள் இந்த உடன்படிக்கயினை திறமையாகப் பயன்படுத்துவதற்கு நாடுகளுக்கு உதவியளிப்பதற்காக மூல விதிகளை விரிவாக்குதல் உள்ளடங்கலான ஏனைய ஒத்துழைப்பு பகுதிகள் தொடர்பிலும் அவ்வாறே வரியல்லா அளவீடுகள் தொடர்பான உத்தேச சட்டரீதியான உடன்படிக்கை தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர். APTA இற்கு மொங்காலியாவினை ஒருங்கிணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.2 தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் (SAFTA)

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான உடன்படிக்கை சார்க் அங்கத்துவ அமைச்சர்களின் பேரவையினால் பூர்த்தி செய்யப்பட்டு பாகிஸ்தான், இஸ்லாமபாத்தில் 2004 ஜனவரி 06 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. SAFTA இன் இறுதி வடிவத்திற்கான பூர்வாங்க வேலையானது அங்கத்துவ நாடுகளிலிருந்தான நிபுணர்களைக் கொண்டு தாபிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

SAFTA இன் நோக்கமானது, 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவாக்குவதேயாகும்.

இலங்கையானது 2012 ஜனவரியிலிருந்து ஜீன் வரையிலான காலப்பகுதியில் 2009 SAFTA இன் கீழ் பங்களாதேஸ், இந்தியா, மாலைதீவு,14 நேபாளம் மற்றும் பாகிஸ்தான ஆகிய நாடுகளுக்கு 229,408.00 பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதிப் பொருட்கள் கொப்பரா, தேங்காய் பால்மா, மிளகு, பீங்கான உற்பத்திகள் மற்றும் துணிவகைகள், மீள் சுற்று கடதாசி உற்பத்திகள், கண்ணாடி நார் உற்பத்திகள், மர தளபாடங்கள், முலாமிடப்பட்ட

கல்சியம் கார்பனேற் மற்றும் தரை ஓடுகள் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது. 2012 ஜீனிலிருந்து ஜீலை வரையில் சார்க் அங்கத்துவ நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதி 1,289,200.20 ஆகும்.

ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளினாலும்20% இனால் குறைப்புச் செய்யப்பட்ட நெகிழ்வுத் தனமையுடைய பட்டியல்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் இலங்கை தவிர்ந்த ஏனைய அனைத்து அங்கத்துவ நாடுகளினாலும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையானது இது தொடர்பான 20% குறைப்பினை நிறைவு செய்வதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

2012 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பின்வரும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. SAFTA நிபுணர்கள் குழுவின் ஏழாவது கூட்டம் – 2012 பெப்ரவரி 14 – 15 வரையில்.
2. SAFTA இன் அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் ஆறாவது கூட்டம் – 2012 பெப்ரவரி 10 ஆம் திகதி
3. SAARC சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் கீழான நெகிழ்வுப் பட்டியல்களிலுள்ள குறைப்பு மீதான தொழிற்படு குழுவின் (SAFTA) முதலாவது கூட்டம் (கட்டம் 111), நேபாளம், காத்மண்டுவில் 2012, ஜீன் 18.

மேற்படி கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

- வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் SAFTA இன் கட்டம் 11 இன் விரைவான அமுலாகத்திற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்
- குறைப்புச் செய்யும் நோக்குடன் வரியல்லா அளவீடுகள் மற்றும் வரி அளவீடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விசேட நிபுணர்கள் குழு கூட்டமொன்றினை நடாத்துதல்.
- உத்தேச கட்டம்111 இன் கீழான நெகிழ்வுப் பட்டியலினை மேலும் குறைப்பதற்கான வரையறைகள்

### 6.3 வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கைகள் (SATIS)

வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையானது 2010 ஏப்பிரலில் கைச்சாத்திடப்பட்டது. அங்கத்துவ நாடுகள் இந்த உடன்படிக்கயின் கீழான இணக்கப்பாடுகளின் அட்டவணையினை நிறைவு செய்யும் நடைமுறையினை ஆரம்பித்துள்ளன. அதன் முன்னேற்றம் பின்வருமாறு.

- இலங்கையானது, டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்(DDA) கீழ் பட்டியலிடப்பட்ட ஆரம்ப கோரிக்கைகளின் அடிப்படையிலான தனது ஆரம்ப நிபந்தனைக்குட்பட்ட கோரிக்கயினை ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.
- இலங்கையானது அதன் கோரிக்கைப் பட்டியல்களை அங்கத்துவ நாடுகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பங்களாதேஸ், பூட்டான்,இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்தும் கோரிக்கைப் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளன.

பின்வரும் கூட்டங்கள் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்டுள்ளதுடன் இருதரப்பு கலந்துரையாடல்கள் மீதும் இணக்கப்பாடுகளின் அட்டவணைகளை நிறைவு செய்வதற்கான கால எல்லையினை வரையறுப்பதிலும் முதன்மையான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

1. வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையின் நிபுணர்கள் குழுவின் எட்டாவது கூட்டம்(SATIS) 2012 ஜனவரி 17 – 18 வரையில் நேபாளம் காத்மண்டுவில் நடாத்தப்பட்டது.
2. வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையின் நிபுணர்கள் குழுவின் ஒன்பதாவது கூட்டம்(SATIS) 2012 பெப்ரவரியில் நடாத்தப்பட்டது
3. வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கையின் நிபுணர்கள் குழுவின் பத்தாவது கூட்டம்(SATIS) 2012 ஜீன் 19 – 20 வரையில் நேபாளம் காத்மண்டுவில் நடாத்தப்பட்டது

## 7.0 வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

### 7.1 வர்த்தக ஊக்குவிப்பு

திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளில் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பும் ஒன்றாகும். வர்த்தக ஊக்குவிப்பின் கீழ் பொறுப்பேற்கப்படுகின்ற நடவடிக்கைகள், ஏற்றுமதிகளுக்கான சந்தை நுண்ணாய்வினை வழங்குதல், சந்தை தடைகளுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல், சந்தைத் தேவைகளுக்குரிய பொருட்கள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கு அறவூட்டுதல், கொள்வனவாளர்களை அறிமுகப்படுத்துதல், வர்த்தக சந்தை பங்குபற்றுதலுக்கு வசதியளித்தல் மற்றும் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள வர்த்தக மன்றங்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுதல் என்பவற்றுடன் தொடர்புபடுகின்றன. வர்த்தக திணைக்களமானது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றுகின்ற வர்த்தக உத்தியோகத்தர்களின் உதவுகையுடன் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறுவனங்களுடனும் “மஹிந்த சிந்தனை” எண்ணக்கருவினை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் “அரச – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் அறிமுகப்படுத்தவதற்கா நடவடிக்கையினை எடுத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட / ஏற்பாடு செய்யப்பட்ட சில பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு.

**- இலங்கை எக்ஸ்போ - 2012**

மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையின் உற்பத்திகளை ஊக்குவிக்குவிப்பதில் பிரதான பங்கினை வகிக்கின்ற வர்த்தக உத்தியோகத்தர்களால் வேளிநாட்டு வாங்குனர்கள்/ முதலீட்டாளர்களைக் கவரும்16 நோக்கில் 2012, மார்ச் மாதம் கொழும்பில் எக்ஸ்போ 2012

நடாத்தப்பட்டது.வர்த்தக உத்தியோகத்தர்கள் முதலீட்டு சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் கூட்டுச்சேர்ந்து எக்ஸ்போ 2012 இற்கு வருகை தரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இறக்குமதியாளர்களை வரவேற்கும் உரிய சந்தைகளில் பல்வேறு பிரசித்தப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகளை செய்திருந்தனர். எக்ஸ்போ 2012 இற்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வருகையாளர்களின் எண்ணிக்கை 1000 ஆகும். எவ்வாறாயினும், உரிய நாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பிரச்சார நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவர்களிலும் பார்க்க அதிகளவிலான வெளிநாட்டு வருகையாளர்கள் வருமை தந்திருந்தனர்.

- **தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி – 2012 இல் வர்த்தக திணைக்களத்தின் சாவடி**

வர்த்தக திணைக்களமானது ஒயாமடுவ, அநுராதபுரத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் 2012 தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் பங்குபற்றியது. திணைக்களத்தினால், வர்த்தக திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் அதன் மூலமாக வழங்கப்படும் சேவைகள் குறித்த தகவல்களைக் கொண்டதான கையேடுகள் வர்த்தக திணைக்களத்தின் சாவடியில் வைத்து பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

- ***சீசெல்ஸ் வர்த்தக தூதுக்குழுவின் வருகையுடனான வர்த்தக கூட்டங்கள்***

*சீசெல்ஸ்* நாட்டு ஜனாதிபதி அதிமேதகு ஜேம்ஸ் அலிக்ஸ் மைக்கல் தனது நாட்டு வர்த்தக தூதுக்குழுவொன்றுடன் 2012 ஆகஸ்ட் 20 – 23 வரையில் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தார். அவ்விஜயத்தின் போது வர்த்தக திணைக்களமானது இலங்கைக்கும் சீசெல்ஸ் நாட்டுக்குமிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களைப் பரிதாறிக் கொள்ளும் நோக்குடன் வருகை தந்திருந்த வர்த்தக தூதுக்குழுவுடன் காலையுணவுடன் கூடிய சந்திப்பொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் இலங்கை மற்றும் *சீசெல்ஸ்* நாடுகளில் முதலீட்டினை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கான விளக்கமளிப்புக்காக நாடு பற்றிய சமர்ப்பித்தலும் பல்வேறு புகழ்பெற்ற துறையினைச் சேர்ந்தர்களின் சமர்ப்பித்தல்களும் இடம்பெற்றன.

- **சுவாஸிலாந்து வர்த்தக தூதுக்குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக கூட்டங்கள்**

அதிமேதகு இலங்கை ஜனாதிபதி அஅவர்களின் அழைப்புக்கிணங்க மாண்புமிகு சுவாஸிலாந்து மன்னர் அவர்கள் தனது உத்தியோகபூர்வ தூதுக்குழுவுடன் இணைந்து 3 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக 2012 ஆகஸ்ட்13 ஆம் திகதியன்று இலங்கை வந்திருந்தார். இந்த விஜயத்தின் பிரதான நோக்கம் இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பினை விரிவாக்குவதும் வலுப்படுத்துவதுமேயாகும்.

இந்த விஜயத்தின் போது வர்த்தக திணைக்களமானது சுவாஸிசலாந்து உத்தியோகபூர்வ தூதுக்குழுவுடன் அரசாங்க அதிகாரிகள், தனியார் துறை கம்பனிகள் மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சவார்த்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த அமர்வானது வெளி விவகார அமைச்சின் மாநாட்டு அறையில் 2012 ஆகஸ்ட 14 ஆம் திகதியன்று இடம்பெற்றது.

- **முதலீட்டாளர் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டம் – இமுச**

பின்வரும் விடயங்களில் முதலீட்டு சபை அதிகாரிகளின் அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் முதலீட்டு சபையின் முதலீட்டாளர் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டமொன்று வர்த்தக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- தற்போது இலங்கைக்குப் பொருந்தக்கூடிய முன்னுரிமைரீதியான வர்த்தக உடன்படிக்கை
- மூல விதிகளின் வகையீடு
- உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் வழங்கலுடன் தொடர்புடைய கிரய கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான நடைமுறைகள்
- ஜிஎஸ்பி சான்றிதழ்களினை வழங்குதல்

- **சிறு ஏற்றுமதி பயிர்களின் ஏற்றுமதியாளர்களுக்கான வேலைப்பட்டறையில் வர்த்தக திணைக்களத்தின் சமர்ப்பித்தல்**

குறித்த ஆண்டு காலப்பகுதியில், திணைக்களமானது வாசனைத்தரவியங்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களில் புதிய சந்தை தொடர்பில் பிராந்திய ஏற்றுமதியாளர்களுக்கிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்களில் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

வேலைப்பட்டறைகள் கண்டி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டுள்ளதுடன் வர்த்தக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் வாசனைத் திரவியங்களுக்கான புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதிலும் விளக்கமான சமர்ப்பித்தல்களை வழங்குவதிலும் அக்கறையுடன் ஈடுபட்டுள்ளார்கள்.

- **TESCO Plc. மூலமான வாங்கும் தூதுக்குழு**

திணைக்களமானது 2012 டிசம்பர் 4 - 7 வரையில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஸ் மல்ரிநஷனல் குறோசறி மற்றும் **TESCO Plc** எனும் சில்லறை வியாபாரி ஆகிய வாங்கும் தூதுக்குழுவினை திணைக்களம் ஒருங்கிணைத்துள்ளது. அத்தகைய விஜயமானது இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தகப் பிரிவினால் ஏற்பாடு

செய்யப்பட்டது. இந்த விஜயத்தின் போது 22 இலங்கை ஏற்றுமதி கம்பனிகள் TESCO உடன் சந்திப்பினை மேற்கொண்டுள்ளன. TESCO ஆனது 5 இலங்கை கம்பனிகளை அவை ஆரம்ப நிலையிலுள்ளதாக வகைப்படுத்தியுள்ளதுடன் அவை TESCO வழங்குனர் வழிகாட்டுதல்களின்படி, மேலும் செயல்முறைப்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென அறிவித்துள்ளது. 2013 மே இல் பின்வரும் கம்பனிகள் தொடர்பான ஆரம்ப கட்ட கண்க்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- எம்/எஸ் மெற்றிக் புரொடக்ஸ் (தனியார்) லிமிட்டட் – (உற்பத்திப் பொருட்கள்: i Pad Sleeves, I Phone Sleeves, Microsoft Surface RT Sleeves,7", e reader Sleeves, 10" Tablet Sleeves, Ultra Book Sleeves, I Pad cases, Laptop Bags)
- எம்/எஸ் லங்கா பலூன்ஸ் ஹோல்டிங்ஸ் (தனியார்) லிமிட்டட் – (உற்பத்திப் பொருட்கள்: Natural Latex Baloons)
- எம்/எஸ் லங்கா பிறஸ் எக்ஸ்போர்ட்ஸ் (தனியார்) லிமிட்டட் - உற்பத்திப் பொருட்கள்: தூரிகைகள் மற்றும் தும்பினாலான துடைப்பங்கள், பிவிசி மற்றும் பனை , இறப்பர்0000)

- **US, GSP நிகழ்சித்திட்டம் மீது விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கருத்தரங்கு**

ஐக்கிய அமெரிக்கா – இலங்கை TIFA கூட்டு ஆணைக்குழுவின் 10 ஆவது கூட்டத்தில், வர்த்தக திணைக்களமும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் இணைந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2012 மார்ச் 31 இல் இடமபெற்ற US, GSP நிகழ்ச்சித்திட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்திருந்தன. ஐக்கிய அமெரிக்க வர்த்தக உறவுகள் பிரதி உதவியாளர் திருமதி.மாறா புர் அவர்கள், சுமார் 100 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் இலங்கை வர்த்தக சமூகத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் குறித்து இக்கருத்தரங்கினை நடாத்தினார்.

- **ஐக்கிய அமெரிக்க தூதுக்குழுவிற்கும் இலங்கை பெண்கள் வர்த்தக மன்றத்திற்கும் இடையிலான சந்திப்பு.**

TIFA பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்து, திணைக்களமானது இலங்கை பெண் தொழில முயற்சியாளர்களுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான வழிகளை இனங்காணும் நோக்குடன் இலங்கை பெண்கள் வர்த்தக மன்றத்திற்கும் ஐக்கிய அமெரிக்க தூதுக்குழுவிற்குமிடையில் சந்திப்பொன்றினை வசதிப்படுத்தியிருந்தது. இச்சந்திப்பானது, பெண்கள் வர்த்தக மன்றத்தின் 20 உறுப்பின்ர்களின் பங்குபற்றுதலுடன் 2012 மார்ச் 29 ஆம் திகதி வர்த்தக திணைக்களத்தில் நடாத்தப்பட்டது. மேற்படி கலந்துரையாடலில் அமெரிக்க தரப்புக்கு ஐக்கிய அமெரிக்க வர்த்தக உறவுகள் பிரதி உதவியாளர் திருமதி.மாறா புர் அவர்கள் தலைமை தாங்கினார்.

## 7.2 சுற்றுலா ஊக்குவிப்பு

நாட்டில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், உடனடியாக கவனம் செலுத்தப்பட்ட துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலா இடமாக இலஙகையை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தயோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான தந்திரோபாயங்கள், விசேட கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா குழுக்கள் விஜயம்செய்தல், சர்வதேச சுற்றுலா சந்தைகளில் பங்குபற்றுதல், இலங்கைக்கான ஊடக தூதுக்குழுக்களை ஏற்பாடு செய்தல், சுற்றுலா ஊக்குவிப்பு பேரவைகள், அநுசணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரபல்யப்படுத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

## 7.3 வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்பு (FDI)

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக்கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தயோகத்தர்கள் 100 இற்கும் அதிகமான வெளிநாட்டு கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியள்ளதுடன் திறமை வாய்ந்த முதலீட்டாளர்களாக இனங் காணப்பட்டவர்களுக்கு நாட்டில் கிடைக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் ஏற்கனவே தொழிற்சாலைகளை அமைப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

## 7.4 வர்த்தக விசாணைகளும் வர்த்தக பிணக்குகளும்

மீளாய்வு காலப்பகுதியில், திணைக்களமும் அதன் வர்த்தக உத்தியோகத்தர்களும் வர்த்தக விசாணைகளை வழங்குவதில் பெரும் பங்காற்றியுள்ளதுடன், விசாணைகள் திறமை மிக்க

கொள்வனவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் வர்த்தக மன்றங்கள் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பவற்றினூடாக அவர்களின் ஒத்திசைவான தொடர்புகள் மற்றும் உள்ளார்ந்த வாங்குனர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் பெறப்பட்ட விசாரணைகளுக்கு சேவையளிக்கப்பட்டன.

## 7.5 வதிவிட விசாவுக்கான பரிந்துரை

வர்த்தக திணைக்கமானது, இலங்கையிலுள்ள வெளிநாட்டு தொழில் அதிபர்கள், தொழில் முயற்சியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், உசாவுலர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தயோகத்தர்கள் ஆகியோருக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு வழங்குவதில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு உதவியளிக்கின்றது. இப்பணியினை நிறைவேற்றுவதற்காக திணைக்களமானது உண்மையாக பரிந்துரை செய்யப்பட்ட விசாக்களை உறுதிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துவதுடன் தேசிய அபிவிருத்தி அவ்வாறே மனிதவள அபிவிருத்தி நோக்கிலான ஆதரவினையும் வழங்குகின்றது.

2012 இல் திணைக்களமானது, 83 இந்திய, 39 பிரித்தானிய, 21 பாகிஸ்தானிய, 18 யப்பானிய மற்றும் ஒஸ்ரியன், அவுஸ்திரேலிய, பெல்ஜிய, பிரெஞ்சு, ஜேர்மனிய, கொரிய, ரஷிய, மற்றும் தென்னாபிரிக்க உள்ளடங்கலான பல்வேறு நாடுகளுக்கான 211 வதிவிட விசாக்களை வழங்கியுள்ளது.

## 7.6 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இல. குத்கை சட்டத்தின் கீழ் கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், வர்த்தக பணிப்பாளர் நாயகம், ஏதேனும் கம்பனி, நிறுவனம், நிறுவகம் அல்லது தனிநபர் எவரையேனும் அங்கீகரிக்கப்பட்ட முகவராண்மையாக பிரகடனம் செய்வதற்குரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்.1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் பிரிவு 114(1) கீழ் கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் ஏனைய இரண்டு நபர்களைக் கொண்ட சபையினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் அவ்வாறு செயற்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

## 8.0 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குதல்

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்குகின்றது.

- முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

மேற்படி, முன்னுரிமை ஏற்பாடுகள், பிராந்திய உடன்படிக்கைகள் மற்றும் பிராந்திய/இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் நாளொன்றுக்கு சராசரியாக 600 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

முறையாக மேம்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்ளைக் கொண்ட குழுவானது, உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழு நேரமும் ஈடுபட்டுள்ளதுடன் முன் அநுமதியின்றி அலுவலக நேரத்தில் உசாவுதல் மேற்கொள்ளவும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். நாளாந்தம் சராசரி 25 உசாவுதல்கள் தகுதி வாய்ந்த அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 மற்றும் 2012 இல் மேற்கொள்ளப்பட்ட உரிய உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கையினை ஒப்பீடு செய்யும் அட்டவணையானது ***இணைப்பு - 1*** இல் தரப்பட்டுள்ளது.

**இணைப்பு -1**

**2011 மற்றும் 2012 ஆம் அண்டு காலப்பகுதியில் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நாட்டு சான்றிதழ்கள்**

| இல | நாடு | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | உ.நா.சான்றிதழ்களின் எண்ணிக்கை | % | உ.நா.சான்றிதழ்களின் எண்ணிக்கை | % |
| | **ஜிஎஸ்பி இன் கீழ்** | | | | |
| 1 | ஒஸ்ரியா | 330 | 0.25 | 342 | 0.30 |
| 2 | பெல்ஜியம் | 5,832 | 4.46 | 5376 | 4.72 |
| 3 | பல்கேரியா | 80 | 0.06 | 62 | 0.05 |
| 4 | சைப்பிரஸ் | 873 | 0.67 | 616 | 0.54 |
| 5 | செக் குடியரசு | 374 | 0.29 | 784 | 0.69 |
| 6 | டென்மார்க் | 916 | 0.7 | 784 | 0.69 |
| 7 | எஸரோனியா | 90 | 0.07 | 73 | 0.06 |
| 8 | பின்லாந்து | 350 | 0.27 | 297 | 0.26 |
| 9 | பிரான்ஸ் | 6,914 | 5.29 | 5226 | 4.59 |
| 10 | ஜேர்மனி | 15,204 | 11.62 | 9456 | 8.30 |
| 11 | கிறீஸ் | 212 | 0.16 | 143 | 0.13 |
| 12 | ஹங்கேரி | 134 | 0.1 | 136 | 0.12 |
| 13 | அயர்லாந்து | 481 | 0.37 | 522 | 0.46 |
| 14 | இத்தாலி | 7,512 | 5.74 | 4960 | 4.36 |
| 15 | லத்வியா | 190 | 0.15 | 170 | 0.15 |
| 16 | லிதவானியா | 84 | 0.06 | 130 | 0.11 |
| 17 | லக்ஸம்பேர்க் | 0 | 0 | 3 | 0.00 |
| 18 | மால்ரா | 19 | 0.01 | 17 | 0.01 |
| 19 | நெதர்லாந்து | 5,678 | 4.34 | 5089 | 4.47 |
| 20 | போலந்து | 867 | 0.66 | 825 | 0.42 |
| 21 | போர்த்துக்கல் | 156 | 0.12 | 159 | 0.14 |
| 22 | ரூமானியா | 49 | 0.04 | 59 | 0.05 |
| 23 | ஸலோவாக்கியா | 2,004 | 1.53 | 1193 | 1.05 |
| 24 | ஸ்லோவேனியா | 69 | 0.05 | 59 | 0.05 |
| 25 | ஸ்பெயின் | 1,663 | 1.03 | 1301 | 1.14 |
| 26 | சுவீடன் | 2,940 | 1.27 | 1366 | 1.20 |
| 27 | ஐ.இ | 43,652 | 2.25 | 38825 | 34.09 |
| 28 | ஈஈசி | 1,317 | 33.37 | 0 | 0.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | அவுஸ்திரேலியா | 583 | 1.01 | 696 | 0.61 |
| 30 | கனடா | 660 | 0.45 | 1162 | 1.02 |
| 31 | யப்பான் | 3,254 | 0.5 | 3325 | 2.92 |
| 32 | நியூசிலாந்து | 155 | 2.49 | 160 | 0.14 |
| 33 | நோர்வே | 419 | 0.12 | 612 | 0.54 |
| 34 | ரஷிய கூட்டமைப்பு | 3,610 | 2.76 | 3519 | 3.09 |
| 35 | சுவிற்சர்லாந்து | 990 | 0.76 | 1075 | 0.94 |
| 36 | துருக்கி | 1,996 | 1.53 | 914 | 0.80 |
| 37 | ஐக்கிய மெரிக்கா | 2,196 | 1.68 | 2319 | 1.80 |
| 38 | பெலாறஸ் | 96 | 0.07 | 103 | 2.04 |
| 39 | சிஐஎஸ் | 871 | 0.67 | 1009 | 0.29 |
| | **APTA இன் கீழ்** | | | | |
| 40 | பங்களாதேஸ் | 6 | 0 | 1 | 0.00 |
| 41 | சீனா | 1,354 | 1.04 | 1770 | 1.55 |
| 42 | இந்தியா | 182 | 0.14 | 72 | 0.06 |
| 43 | கொரியா | 364 | 0.28 | 938 | 0.82 |
| | **SAFTA இன் கீழ்** | | | | |
| 44 | சப்ரா - இந்தியா | 9 | 0.01 | 7 | 0.01 |
| 45 | சப்ரா - பங்களாதேஸ் | 8 | 0.01 | 4 | 0.00 |
| | சப்ரா - மாலைதீவு | 0 | | 5 | 0.00 |
| | சப்ரா - பாகிஸ்தான் | 0 | | 8 | 0.01 |
| | சப்ரா - நேபாளம் | 0 | | 2 | 0.00 |
| | **SAPTA இன் கீழ்** | | | | |
| 48 | பங்களாதேஸ் | 0 | 0 | 1 | 0.00 |
| 49 | பூட்டான் | 0 | 0 | 0 | 1.55 |
| 50 | இந்தியா | 205 | 0.16 | 240 | 0.06 |
| 51 | மாலைதீவு | 0 | 0 | 2 | 0.82 |
| 52 | நேபாளம் | 1 | 0 | 0 | 0.01 |
| 53 | பாகிஸ்தான் | 33 | 0.03 | 10 | 0.00 |
| | **GSTP இன் கீழ்** | | | | |
| 54 | பெரு | 73 | 0.06 | 99 | 0.09 |
| 55 | மெக்ஸிக்கோ | 26 | 0.02 | 35 | 0.03 |
| 56 | சிலி | 0 | 0 | 1 | 0.00 |
| 57 | பிறேசில் | 0 | 0 | 1 | 0.00 |
| 58 | ஈரான் | 0 | 0 | 0 | 0.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **இருதரப்பு முன்னுரிமை வர்த்தக உடன்படிகைகளின் கீழ்** | | | | |
| 59 | ISFTA | 10,373 | 7.93 | 9742 | 8.55 |
| 60 | PSFTA | 5,219 | 3.99 | 8057 | 7.07 |
| 61 | ஜீஎஸ்பி இந்தியா (பிராந்திய ஒருங்கிணைவு) | 0 | | 24 | 0.02 |
| | **மொத்த உ.நா.சான்றிதழ்கள்** | **130,814** | **100** | **113886** | **100** |

**பதவியினர் இடநகர்வுகள் – 2012**

| உத்தியோகத்தரின் பெயர் | இடநகர்வு | திகதி |
|---|---|---|
| திரு.பி.டி.பெர்ணாண்டோ<br>வர்த்தக பணிப்பாளர் நாயகம் | வர்த்தக பணிப்பாளர் நாயகமாக பதவியேற்றார் | 2012.01.02 |
| திரு.பி.எம்.பி.சோமசிறி<br>வர்த்தக பணிப்பாளர் | வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.02 |
| செல்வி.எல்பி.பீரிஸ்<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| திரு.எம்.சோமசேன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| திரு.பி.ஏ.எஸ்.பொன்னம்பெரும<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| திரு.எஸ்.பி.கே.விஜேசேகர<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| திரு.டி.டி.பிரேமரத்ன<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| **இடமாற்றல்கள்** | | |
| திரு.பி.டி.பெர்ணாண்டோ<br>வர்த்தக பணிப்பாளர் | பிரதி வர்த்தக பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 2012.01.01 |
| திரு.எஸ்.பி.கொடவிற்ற<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | அவுஸ்திரேலியா, சிட்னியில் இலங்கை கொன்சுல் ஜெனரலாக பணியாற்றி திணைக்களம் திரும்பினார். | 2012.01.18 |
| திரு.ஜே.என்.குமார<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் முதல் செயலாளராக (வர்த்தக) பணியாற்றி திணைக்களம் திரும்பினார். | 2012.09.03 |
| திரு.பி.ஜி.பி.ஜயக்கொடி<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | எகிப்திலுள்ளஇலங்கை தூதரகத்திற்கு முதல் செயலாளராக (வர்த்தக) நியமிக்கப்பட்டார் | 2012.11.28 |

Sheet1

**ශීර්ෂ අංකය/த லபப இல /Head No:295**

**අමාත්‍යංශය/දෙපාර්තමේන්තුව:- වාණිජ දෙපාර්තමේන්තුව**
**அ மசச/தணககளம -வரததகதத ணககளம**
**Ministry/Department:-Department of Commerce**

**වැඩසටහන් අංකය/ந கமசச ததடட இல/ Programme No:01**

**ව්‍යාපෘතිය 1/க ரதத டட இல/Project 1**

**පුනරාවර්තන වියදම්/மண வ ரம சலவ/Recurrent Expenditure**

| විස්තරය<br>வ வரணம<br>**Description** | **2011**<br>සත්‍ය<br>වියදම<br>**Actual**<br>**Rs.** | **2012**<br>අනුමත<br>ඇස්තමේන්තුව<br>**Actual**<br>**Rs.** | **2012**<br>සංශෝධිත<br>ඇස්තමේන්තුව<br>**Revised**<br>**Estimate**<br>**Rs.** | **2012**<br>සත්‍ය වියදම<br>**Actual**<br>**Rs.** | ඉතිරිය<br>**Savings**<br>**Rs.** |
|---|---|---|---|---|---|
| පෞද්ගලික පඩිනඩි<br>ஆளககரய வதன தகள<br>Personal Emoluments | 24922000 | 31275000 | 31275000 | 26823235 | 4451765 |
| වෙනත්<br>ஏ ளயவகள<br>Other | 50499000 | 58030000 | 58030000 | 54490223 | 3539777 |
| මුළු වියදම් පුනරාවර්තන<br>එකතුව/ ம ததம/**Total** | **50499000** | **89305000** | **89305000** | **81313458** | **7991542** |

මූලධන වියදම්
**மூலதனச் செலவு**
Capital Expenditure

| වැය විෂය අංකය විස්තර / | ('000) සත්‍ය වියදම **உண்மை** Actual (2011) | ('000) අනුමත ඇස්තමේන්තු **மதிப்பீடு** Estimate (2012) | ('000) සංශෝධිත ඇස්තමේන්තු **மாற்றம் செய்யப்பட்ட மதிப்பீடு** Revised Estimate (2012) | ('000) සත්‍ය වියදම **உண்மை** Actual (2012) | ඉතිරිය **சேமிப்பு** Savings |
|---|---|---|---|---|---|
| <u>මූලධන වත්කම් පුනරුත්ථාපනය හා වැඩි දියුණු කිරීම</u> <u>**மூலதன சொத்துக்களின் முன்னேற்றம்**</u> <u>**Rehabilaisation and Improvement of Capitasl Assets**</u> | 328 | 580 | 580 | **433** | **147** |
| යන්ත්‍ර සූත්‍ර හා උපකරණ (2002) **பொறித்தொகுதியும் இயந்திர வகையும் உபகரணமும்** Plant Machinery & Equipment | 110 | 400 | 400 | 299 | 101 |
| වාහන (2003) **வாகனங்கள்** Vehicles | 218 | 180 | 180 | 134 | 46 |
| <u>මූලධන වත්කම් අත්පත් කර ගැනීම</u> <u>**மூலதன இருப்பு சொத்துக்கள் கைப்பற்றல்**</u> <u>Acquisition of Capital Assets</u> | 610 | 900 | 900 | **828** | 72 |
| වාහන **வாகனங்கள்** Vehicles | – | – | – | – | – |
| ලී බඩු හා කාර්යාලයීය උපකරණ(2102) **தளபாட காரரியாலய உபகரணம்** Furniture & Office Equipment | 373 | 400 | 850 | 780 | 70 |
| යන්ත්‍රෝපකරණ (2103) **இயந்திர வகை** Machinery | 237 | 500 | 50 | 48 | 2 |
| <u>හැකියා වර්ධනය</u> <u>**கொள்திறன் கட்டுமானம்**</u> <u>Capacity Building</u> | 495 | 500 | 500 | **322** | **178** |
| පුහුණු කිරීම හා හැකියා වර්ධනය (2401) **பயிற்சியும்கொள்திறன் கட்டுமானமும்** Training & Capacity Building | 495 | 500 | 500 | 322 | 178 |
| <u>වෙනත්</u> **ஏனைய மூலதனம்** <u>Other Capital</u> | **3523** | **7000** | **7000** | **5420** | **1580** |
| වෙළඳ ප්‍රවර්ධන ක්‍රියාකාරකම් (2502) **வார்த்தக விருத்தி செயற்பாடுகள்** Trade Promotion Activities | 3523 | 7000 | 7000 | 5420 | 1580 |
| එකතුව/**மொத்தம்** /Total | 4956 | 8980 | 8172 | 7003 | 1169 |